**நுவரெலியா மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு அடுத்த ஆண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 10,592,134 தொகையை நடைமுறை பொறுப்பின் கீழ் ஐந்தொகையில் காண்பிக்கப்பட வேண்டிய போதும் செலுத்த வேண்டிய முழுத்தொகையான ரூபா 18,336,366 தொகையை நீண்ட கால பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் அடுத்த ஆண்டின் போது பொதுக் கணக்கீட்டு கோட்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்ததுடன் அதன் போது குறித்த சீராக்கங்களை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கடன் மூலதனம், நீண்ட கால மற்றும் குறுங்காலம் என இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) நன்கொடையாக சபைக்குக் கிடைத்திருந்த 17 மோட்டார் வாகனங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்கு இயந்திரப் பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீடொன்றை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) நிதிக்கூற்றுக்களில் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 10,675,357 தொகை குறைத்துக் காண்பித்தும் இரண்டு சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 252,975 தொகை கூடுதலாகக் காண்பித்தும் காண்பிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் குறித்த நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஐந்தொகையில் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 196,124 தொகை கடன் கொடுத்தோராகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாகவும் அடுத்த ஆண்டின் போது இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப் பட்டிருந்த மீதிகள் மற்றும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 3,450,135 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளில் தொடர்பாக ஆராய்ந்து உரிய அட்டவணைகள் அல்லது நிதிக் கூற்றுக்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| செலவின மீள்நிரப்பல் அடிப்படையில் கொடுப்பனவு | 531,497 | செலவினத்திற்குரிய உறுதிச்சீட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள், உடன்படிக்கைகள் | மேலும் பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு விடயங்களை சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல் களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

**சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 யூலை 14 ஆந் திகதிய 2015/03 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) மற்றும் | பெற்றுக் கொண்ட செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் அல்லது செயற்பாடு முடிவடைந்தவுடனே மீண்டும் மீள் நிரப்பப்பட வேண்டிய போதிலும் 05 | பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக வரைவு குற்றச்சாட்டு பத்திரம் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பியுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை யின் 05 ஆம் பந்தி | ஆண்டுகள் முதல் 08 ஆண்டு காலப்பகுதியில் இருந்து மாநகர சபையின் வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் கொள்வனவு மற்றும் சில்லறைக் காசு முற்பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டு பணம் தீர்வு செய்யப்படாமல் ரூபா 1,214,500 ஆன 09 முற்பண மீதிகள் காணப்பட்டன. | அறிவிக்கப்பட்டுள்ளது . |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 130,904,874 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 125,474,515 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i | ஆண்டின் பட்டியலிடப்பட்ட வீத வரி வருமானத்தில் ரூபா 31,367,682 தொகையும் ஆரம்ப நிலுவை வீதவரியில் இருந்து ரூபா 59,344,072 தொகையுமாக 6418 வீதவரி அலகுகளில் இருந்து வீதவரி அறவிடப்பட வேண்டிய போதிலும் அறவீட்டின் செயன் முன்னேற்றம் போதியளவில் காணப்படவில்லை. | 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இறுதி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | ரூபா 6,501,810 ஆன கடை வாடகை 05 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை நீண்ட காலமாக 45 கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | குத்தகையை முடிவுறுத்தம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| **(இ)** | **நீர்க் கட்டணம்** | | |
| | 15 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.6,175,509 ஆன நிலுவை காணப்பட்டது. | .03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 2000 ஐ விட மேலதிகமாக நிலுவையாகக் | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்படும் நீர் சேவைகளுக்காக 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் சிவப்பு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| i | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 35 நபர்களிடமிருந்து ஆதன வரி ரூபா 15,510,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி நிலுவை தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த 481 காணி அனுமதிப்பத்திரங்களுக்குரிய அறவிடப்பட வேண்டிய வரி ரூபா 19,247,649 ஆன வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி நிலுவை தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 184 காணி உடமையாளர்களிடமிருந்து காணி வரி ரூபா 16,878,328 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி நிலுவை தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| iv. | விக்டோரியா பூங்காவில் புதிய சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு ஆண்டுதோறும் 10 வீத அதிகரிப்பு அடிப்படையில் 2011 மார்ச் 15 ஆம் திகதி முதல் 10 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2012 பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுச் சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தின் பிரகாரம் இச் சிற்றுண்டிச்சாலை வருடாந்தம் திறந்த கேள்வி நடைமுறையில் கடந்த 10 ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. இந்த குத்தகையாளர் ரூபா 2,241,319 தொகையை 2017 ஆம் ஆண்டு கொடுப்பனவு செய்வதை தவிர்ப்புச் செய்திருந்த போதும் சபை இக்குத்தகை யாளருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுத்திருக்க வில்லை. | வழக்கு தொடர்வதற்காக சட்டத்தரணிக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| v. | சபைக்குரிய குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த உடு புஸ்ஸல்லாவ வீதி மீள்சுழற்சி நிலையத்திற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 122,286 மற்றும் ரூபா 598,125 ஆன குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் எதிர்காலத்தில் சீராக்குவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபையின் கட்டிடப் பொருட்கள் கொள்வனவிற்காக 2018 நவம்பர் 05 ஆம் திகதி இடம்பெற்ற நிதிக்குழு அங்கீகாரத்தின் படி அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,525,000 பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய பொருட்கள் மூலம் கிடைக்காததன் காரணமாக ரூபா. 415,107 மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் இருந்து மேலும் பெற்றுக் கொள்வதற்கு இருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 245,400 மாத்திரம் எனவும் அது இவ்வாண்டில் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து பொருட்கள் கிடைத்த பின்னர் முன்னைய கொடுப்பனவு தீர்வு செய்யப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்த பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேவைப்பாடு தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் ரூபா 1,393,220 ஆன நீர் உபகரணங்கள் வழங்காமல் 11 மாதங்கள் மற்றும் 4 வருடங்கள் 08 மாதங்கள் காலம் களஞ்சியத்தில் விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்த துடன் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 26 ஆம் திகதி களஞ்சிய பௌதீகப் பரிசோதனையின் போது ரூபா 366,145 ஆன இருப்பு பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | காணப்படும் நிலைமையில் எதிர்காலத்தில் பரீட்சிக்கப்பட்டு மெதுவாக அசையும் இருப்புகள் தொடர்பாக ஆய்வு செய்து நிறுவனத்தில் செயற்திறனாக பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பற்றாக்குறை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |